1995 ஏப்ரல் 20]

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஆர்.பி. பரமசிவம்: குறிப்பாக வணிக வரித் துறையின் மூலமாக நம்முடைய அரசுக்கு நிறைய வருமானத்தை ஈட்டி, இந்த அரசை நடத்துகின்ற நிலை ஏற்படுகின்றது. இந்த நிலையில் அந்த சோதனைச் சாவடிகள் வழியாக அந்த வாகனங்கள் செல்லாமல் பை-பாஸ் வழியாகச் சென்று நமக்குச் செலுத்த வேண்டிய வரியை ஏமாற்றுவதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அப்படி ஏமாற்றுகின்ற வாகனத்தைத் தடுத்து நிறுத்தி அரசுக்கு வருமானத்தை ஈட்டுகின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோதனைச் சாவடி வழியாக வராமல் வேறு மார்க்கத்தில் வரியை ஏய்ப்பதற்காகச் சரக்கு வாகனங்கள் செல்லாமல் இருக்க சுற்றுப்படை ஒன்று வணிக வரி சோதனைக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த சுற்றுப்படை, வாகனங்களைக் கண்காணித்து வரி ஏய்ப்பைத் தடுக்கின்ற நடவடிக்கைகளில் மும்முரமாக செயல்பட்டு வருகின்றது. அதனால் நல்ல பலன் கிடைத்து இருக்கின்றது. மேலும், ஒரு சோதனைச் சாவடி அமைத்த பிற்பாடு அதற்கு மாற்று வழியைக் கண்டுபிடித்து வணிகர்கள் வரியை ஏய்ப்பதற்காக வாகனங்களை திசை திருப்பிச் செல்வார்களேயானால் அதனைத் தடுப்பதற்காக சோதனைச் சாவடியை இடம் மாற்றம் செய்து வரி ஏய்ப்பைத் தடுக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 376, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

376—

காமராஜர் நினைவு இல்லத்தில் ஒலி-ஒளிக் காட்சி

15646*—திரு. ஆர். சிங்காரம்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[*1995 ஏப்ரல் 20*

சென்னை தியாகராய நகரில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லத்தில் அவர் வாழ்க்கை வரலாற்றை ஒலி-ஒளிக் காட்சி மூலம் விளக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜ் அவர்களைப் பற்றி நான் இந்த மன்றத்திற்கு அதிகமாக எடுத்துரைக்க வேண்டிய அவசியம் இல்லை. காரணம், ஒரு காலத்தில் இந்திய நாட்டினுடைய 'கிங் மேக்கர்'-ஆகத் திகழ்ந்தார் என்பது அனைவருக்கும் தெரியும். பிரைம் மினிஸ்டர்களை தேர்ந்தெடுக்கின்ற 'கிங் மேக்கர்' -ஆகத் திகழ்ந்து இந்திரா காந்தி வரை பிரைம் மினிஸ்டராக தேர்ந்தெடுத்த பெருந்தலைவர் காமராஜர், ' கிங் மேக்கர்' அவர்களுடைய இல்லம் தியாகராய நகரில் உள்ளது. அந்த இல்லத்தை அரசு எடுத்து அதனை நினைவில்லமாக பராமரித்து வருகின்றது. அந்த நினைவில்லத்தில் அவருடைய வாழ்க்கையை சித்தரிக்கின்ற, அவருடைய தியாகங்களை சித்தரிக்கின்ற, அவருடைய நேர்மை, தூய்மை ஆகியவற்றை சித்தரிக்கின்ற ஒலி-ஒளிக் காட்சி அமைத்துக் கொடுத்தால் அவர்களுடைய நினவை மேலும் மேலும் மக்களுக்கு வரும் என்ற காரணத்தால் இந்த வினாவைத் தொடுத்திருக்கின்றேன். இந்த நாட்டின் பெருந்தலைவர் காமராஜருக்கு நினைவில்லம்--இங்கே அவருடைய இடத்தை நினைவில்லம் ஆக்கியது பெரிய காரியம் அல்ல என்றாலும்கூட தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில்தான் முக்கியமான பெருந்தலைவர்களுக்கு, மறைக்கப்பட்ட தலைவர்களுக்கு, உதாரணமாக தியாகச்சுடர் அமரர் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு சென்னையிலே சிலை வடித்து அவர்களுடைய இல்லத்தை நினைவிடமாக்கி பெருமை தேடிக் கொடுத்தவர். டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு மணி மண்டபம் கட்டி ஆதி திராவிட மக்களையெல்லாம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகின்ற அளவிற்கு செய்தவர். இன்னும் எத்தனையோ தலைவர்களுக்கெல்லாம் பெருமை தேடிக் கொடுத்திருக்கின்ற புரட்சித் தலைவியால்தான் இதுபோன்ற காரியங்கள் முடியும் என்று தெரியும். நமக்கும் தெரியும். நாட்டுக்கும் தெரியும். மக்களுக்கும் தெரியும். ஆகவே, இதுபோன்ற ஒரு சாதாரண விஷயத்தை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை

1995 ஏப்ரல் 20]

செய்து இந்த ஒலி-ஒளிக் காட்சி அமைத்து அவர்களுக்குப் பெருமை சேர்க்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்களைப் பெருமைப்படுத்துகின்ற வகையிலே இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், பிறந்த நாள் விழாக்களை நடத்திக் கொண்டு வருகிறது. கல்விக்கண் திறந்த காமராஜர் அவர்களுடைய உருவப்படம் இந்த சட்டமன்றத்திலே திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. கடற்கரை சாலைக்குக்கூட பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. அதேபோல காமராஜர் வாழ்ந்த இல்லம் சென்னையிலே நினைவகமாக ஆக்கப்பட்டிருக்கிறது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பெயரிலே பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டிருக்கிறது. பெருந்தலைவர் காமராஜர் பெயரில் மாவட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆக, எந்தெந்த அளவிலே பெருந்தலைவர் காமராஜரை பெருமைப்படுத்த முடியுமோ அந்தந்த வகைகளிலே இன்றைக்கு புரட்சித் தலைவி அரசு பெருமைப்படுத்தி வருகிறது என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அந்த அடிப்படையிலே அவருடைய வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கின்ற வகையிலே புகைப்படங்கள் இன்றைக்கு நினைவு இல்லத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவர் வாழ்ந்த நேரத்திலே பயன்படுத்திய பொருட்களும் மக்களுடைய பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, எந்த எந்த அளவுக்குப் பெருந்தலைவருக்குச் சிறப்புச் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பெருமைப்படுத்தி வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-05

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இங்கே வந்த பிறகுதான் பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய புகைப்படங்கள், அவருடைய கடந்த கால வாழ்க்கை வரலாறு தொடர்புடைய புகைப்படங்கள் எல்லாம் அங்கே வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பது எனக்குத் தெரியும். நமக்கும் தெரியும்; நாட்டுக்கும் தெரியும்; மக்களுக்கும் தெரியும். ஆனால், அவருடைய வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கின்ற ஒலி-ஒளிக்

காட்சியினை அமைத்து, அவருக்கு மேலும் பெருமை சேர்க்கின்ற வகையில் செய்தால் நலமாக இருக்கும் என்றுதான் நான் இந்தக் கேள்வியினைக் கேட்டிருக்கிறேன். ஆகவே, அதை மீண்டும் நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்-எதையும் எத்தனை கஷ்டங்கள் வந்தாலும், எத்தனை துன்பங்கள் வந்தாலும், எத்தனை துயரங்கள் வந்தாலும், எத்தனை பேரிடி வந்தாலும், எத்தனை சூழ்ச்சிகள் வந்தாலும், எத்தனை பொறாமைகள் வந்தாலும், எத்தனை சதித் திட்டங்கள் வந்தாலும் அத்தனையையும் முறியடித்து, சாதனை படைக்கின்ற தமிழக முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில், இந்த ஒலி-ஒளிக் கண்காட்சியை அமைத்துக் கொடுப்பது என்பது மிகச் சாதாரண விஷயம். ஆகவே, இதை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேநேரத்தில் தற்போது அவருடைய நினைவு இல்லம் இருண்ட வீடாகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் பராமரித்துக் கொண்டிருக்கிறீர்கள். இருந்தாலும் சில நாட்களில் அங்கே விளக்குகள் எரிகின்றன. சில நாட்களில் எரிவது கிடையாது. ஆகவே, அது ஒரு show-ஆக, ஒரு காட்சியாக அமையவில்லை. ஆகவே, அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதை நன்றாகப் பராமரிக்க வேண்டும். ஒலி-ஒளிக் கண்காட்சி அமைப்பதற்கு நீங்கள் மீண்டும் பரிசீலனை செய்வீர்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராசர் எந்த அளவுக்கு சிறப்பு மிக்கவரோ அந்த அளவுக்கு அவருடைய நினைவகம் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதனை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பெருந்தலைவர் காமராசருடைய வாழ்க்கை வரலாற்றை ஒலி-ஒளிக் காட்சியாக அமைக்க வேண்டுமென்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம் அவர்கள் கேட்டுள்ளார்கள். ஆகவே, நிதிநிலைமைக்கேற்ப அரசு அதற்கான முடிவு எடுக்கும் என்பனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சஞ்சய் ராமசாமி.

திரு. சஞ்சய் ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு தியாகராய நகரில் உள்ள பெருந்தலைவர் காமராசர் இல்லத்தில் ஒலி-ஒளிக் காட்சி மூலம் அவருடைய வாழ்க்கை வரலாற்றை எடுத்துக்காட்டுவதற்கு நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்

1995 ஏப்ரல் 20]

என்று சொன்னார்கள். அதற்காக என்னுடைய தொகுதி மக்கள் சார்பில் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இன்றைக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில்தான் பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய பிறந்தநாள் விழா மிகச் சிறப்பாக விருதுநகரில் கொண்டாடப்பட்டது. அதற்கும் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராசருடைய பிறந்தநாள் விழா விருதுநகரில் மட்டும் நடத்தப்படவில்லை. மாநில அளவில் நடத்தப்படுகிறது. எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் புரட்சித் தலைவி அரசின் சார்பிலே நடத்தப்படுகிறது. இந்த அரசைப் பொறுத்தமட்டில், தியாகத்திற்கு 'ஜாதி இல்லை; கட்சி இல்லை, தொண்டுக்கு பேதம் இல்லை' என்கின்ற உணர்வோடு நாட்டுக்கு உழைத்தவர்கள் யார், யாரோ, யார் யாரெல்லாம் பெருமைப்படுத்தப்பட வேண்டுமோ அப்படிப்பட்டவர்களையெல்லாம் பெருமைப்படுத்தி வருகின்ற ஒரே அரசு, இந்தியத் துணைக் கண்டத்திலேயே நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசுதான் என்பதை இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *377*, திருமதி டி. சக்குபாய் தேவராஜ், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

377—

திருவள்ளூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்

33657*—திருமதி டி. சக்குபாய் தேவராஜ்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருவள்ளூரில் உள்ள நகர் மன்ற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,